KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v6i03.64

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

அற இலக்கியங்கள் உணர்த்தும் சமுதாயச் சிந்தனைகள்

Social Ideas Conveyed by Ethical Literature

N. Ranjitha[1,*], Dr. K. Gowri[2]

[1] Ph.D. Research Scholar (Part-time), Department of Tamil, Government Arts College (Autonomous), Salem – 7, Periyar University, Salem – 11.

[2] Research Guide, Associate Professor, Department of Tamil,State College (Autonomous), Chennai – 600 005.

***Corresponding author:** N. Ranjitha, nranjitha2019@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 1 November 2026
Revised: 5 November 2026
Accepted: 8 November 2026

Article ID
KIJTS-2026-0046

Peer review
Double-blind peer review

Keywords
Ethical Literature
Age of Ethics
Pathinenkilkanakku
Thirukkural
Social Thought

ABSTRACT

Tamil soil has the distinction of having given the world the lofty universal idea, "Yaadhum Oore, Yaavarum Kelir" ("Every place is my hometown; everyone is my kin"). From the very time human beings began to live together as a society, certain principles were required to regulate human life and guide society along the path of righteousness. Tamil literary works reflected these principles, standing as mirrors of the times in which they were composed.

In particular, the period following the Sangam Age in the history of Tamil literature is regarded as the "Age of Ethical Literature," as it placed considerable emphasis on human morality and social development. During this period, changes occurred in the elements of personal and public life that had prevailed during the Sangam Age, accompanied by moral deterioration and political transformations in society. In this context, ethical literary works emerged with the purpose of guiding people towards a disciplined and virtuous way of life.

The ethical literature of this period did not merely focus on shaping the individual; it also served as a foundation for creating a healthy and egalitarian society. In the history of Tamil literature, the Sangam Maruviya Period (approximately from the 2nd century CE to the 6th century CE) is celebrated as the Age of Ethics. Among the works belonging to the Pathinenkilkanakku (Eighteen Lesser Texts), works such as the Thirukkural, Naladiyar, Pazhamozhi Naanooru, Sirupanchamoolam, Elathi, and Thirikadugam do not merely discuss individual morality; they also put forward philosophical principles for the construction of an ideal society.

This article examines and consolidates the various social ideas embedded in these ethical literary works and explores their significance in shaping social life.

How to cite this article: N. Ranjitha, & Dr. K. Gowri (2026). அற இலக்கியங்கள் உணர்த்தும் சமுதாயச் சிந்தனைகள். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 739. https://doi.org/10.63300/kalanjiyam.v6i03.64

Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

நா. ரஞ்சிதா

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), சேலம் - 7. பெரியார் பல்கலைக்கழகம், சேலம் -11.

nranjitha2019@gmail.com

முனைவர் கி. கௌரி

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை -- 600 005.

salemgowri16@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற உன்னதமான உலகளாவிய சிந்தனையை உலகிற்குத் தந்த பெருமை தமிழ் மண்ணிற்கு உண்டு. மனிதன் சமுதாயமாக இணைந்து வாழத் தொடங்கிய காலம் தொட்டே, அவனது வாழ்வை முறைப்படுத்தவும் சமுதாயத்தை நல்வழிப்படுத்தவும் சில நெறிமுறைகள் தேவைப்பட்டன. அந்த நெறிமுறைகளைத் தமிழ் இலக்கியங்கள் தங்களின் காலக் கண்ணாடியாக நின்று பிரதிபலித்தன. குறிப்பாக, தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலத்திற்குப் பிந்தைய காலம், மனித ஒழுக்கத்திற்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுத்த “அறநெறிக்காலம்” ஆகும். சங்க காலத்தில் நிலவிய அக, புற வாழ்வியல் கூறுகள் மாறி, சமுதாயத்தில் ஒழுக்கச் சிதைவுகளும், அரசியல் மாற்றங்களும் ஏற்பட்ட சூழலில், மக்களை நெறிப்படுத்த அறஇலக்கியங்கள் தோன்றின. இக்காலத்தில் தோன்றிய அறஇலக்கியங்கள் தனிமனிதனைச் செதுக்குவதோடு நின்றுவிடாமல், ஒரு ஆரோக்கியமான, சமத்துவமிக்க சமுதாயத்தை உருவாக்குவதற்கான அடித்தளமாகத் திகழ்கின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க மருவிய காலம் (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை) அறநெறிக்காலம் என்று போற்றப்படுகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அமைந்துள்ள திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி, திரிகடுகம் போன்ற நூல்கள் தனிமனித ஒழுக்கத்தை மட்டும் பேசாமல், ஒரு உன்னதமான சமுதாயக் கட்டமைப்பிற்கான தத்துவங்களை முன்வைக்கின்றன. இவற்றுள் புதைந்துள்ள சமுதாயச் சிந்தனைகளைத் தொகுத்து இக்கட்டுரை ஆராய்கிறது.

முதன்மைச் சொற்கள்:அற இலக்கியம், அறநெறிக்காலம், பதினெண்கீழ்க்கணக்கு, திருக்குறள், சமுதாயச் சிந்தனை, சங்க மருவிய இலக்கியம்.

முன்னுரை


இலக்கியங்கள் மனித வாழ்க்கையை மேம்படுத்தும் பணியைச் செவ்வனே செய்கின்றன. குறிப்பாகத் தமிழ் இலக்கியங்கள் தனிமனித வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் அறநெறியில் கொண்டு செல்வதனை நோக்கமாகக் கொண்டு படைக்கப் பெற்றுள்ளன. சங்கம் மருவிய இலக்கியங்களில் சிறப்புப் பெற்ற

இலக்கியங்களாகத் திகழும் நீதி நூல்களில் இவற்றின் செல்வாக்கு மேலோங்கி நிற்கக் காணலாம். சங்க நீதி நூல்கள் நாடாளும் மன்னர்கள் முதலாக அடித்தட்டு மக்கள் வரையில் சமூக உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தத்தம் வாழ்வில் ஒழுக்கநெறியைப் பின்பற்றி நடத்தல் வேண்டும் என்பதை அறங்களாக வகுத்துரைத்து, சமூக வளர்ச்சிக்குத் துணைநின்றுள்ளன. அவ்வகையில் பதினெண்கீழ்க்கணக்கின் நீதி நூல்கள் உணர்த்தும் சமுதாய நோக்கிலான சிந்தனைகள் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

சமுதாயம்



உலக உயிரினங்களில் கூடிவாழும் தன்மை பெற்ற உயிரினமாக மனிதன் படைக்கப் பெற்றிருக்கிறான். உலகில் தனிமனிதன் தனித்து வாழ்தல் அரிது. ஆகவே அவன் எல்லாக் காலகட்டத்திலும் பிறரது உதவியோடு வாழவேண்டிய நிலையில் இருக்கிறான். அவ்வகையில் தனிமனிதன் தன்னைப் போன்ற பிறரோடு கலந்துபழகி, தனக்குத் தேவையானவற்றைப் பெற்றும், தன்னிடம் இருப்பதனைக் கொடுத்தும் கூடிவாழும் வாழ்க்கையே சமுதாயம் எனலாகிறது. சமூகம் என்ற பொருளே இப்போது சமுதாயம் என்ற சொல்லில் வழங்கப்படுகின்றது. சமூகம், சமுதாயம் என்பன ஒருபொருளையே குறித்து வருகின்றன.



படம் 1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் வலியுறுத்தும் ஆறு சமுதாயநெறிக் கூறுகள்.

சான்றோருடன் வாழ்தல்



வாழும் ஊர் சிறியது என்றாலும், ஊரில் வாழ்கின்ற மக்கள் சான்றோர்களாக இருக்கவேண்டும். இவ்வாறு சான்றோர்கள் வாழும் ஊரில் ஒருவர் வாழ்ந்தால் அதுவே

அவருக்கு இனிமையான வாழ்வைத்தருவதாக அமைந்திருக்கும் என்பதை இனியவை நாற்பது பின்வருமாறு குறிப்பிடுகிறது:

"மன்றின் முதுமக்கள் வாழும் பதிஇனிதே

தந்திரத்தின் வாழும் தவசிகள் மாண்பினிதே" (இனியவை நாற்பது 18)

மன்றமாவது ஊர் மன்றம். அதாவது சபை கூடும் இடம் பொதுவிடம். மன்றத்து அறிவுடையார் வாழின் அங்கு நீதி நிலைத்திருக்கும் என்பதன் சிறப்பினைக் கருதியே இவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது.

பண்புடையனாய் விளங்குதல்

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" என்கிறது கலித்தொகையில் வரும் பதினாறாம் நெய்தல் பாடல். அனைவரிடமும் எளிய முறையில் செந்தன்மை பூண்டு நடத்தலே பண்புடைமையாகும். பிறர்மேல் பண்புடன் உலகத்தோடு அமைந்த குடியுடன் பிறத்தலும் ஆகிய இரண்டும் ஒருவனுக்குப் பண்பாகும். உறுப்பு மற்றவற்றோடு ஒத்திருப்பது பண்பாகாது; பண்பால் ஒப்புதலே உண்மையான ஒப்பு. நீதியையும் அறத்தையும் விரும்பி பிறர்க்கும் தமக்கும் நன்றியுடையோராய் இருப்பவரை உலகம் பாராட்டும் என்கிறது குறள்:

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்

பண்புபா ராட்டும் உலகு" (திருக்குறள் 994)

அரம்போலக் கூர்மையான திறம்பெற்ற அறிவுடையவராக இருந்தாலும், சமுதாயத்தில் இணங்கி அதில் அங்கம் வகித்து, சமூக நடைமுறையின்படி பண்பட்டு ஒழுகுதலே மக்கட்பண்பு என்கிறார் திருவள்ளுவர்:

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்

மக்கட்பண் பில்லா தவர்" (திருக்குறள் 997)

மக்கட்பண்போடு சமூகத்தின் அசைவுக்கு இசைந்து கொடுக்காதவரை வள்ளுவர் மரமெனச் சாடுகிறார். இதன்மூலம் சமூகத்தில் இணக்கமாக வாழும் வழிவகையை நெறிப்படுத்துகிறார் என்பது தெளிவாகிறது.

வெகுளாதிருத்தல்

வெகுளாமையாவது சினம் கொள்ளாதிருத்தல் ஆகும். சினம், வெகுளி, கோபம் என்பன ஒருபொருளைக் குறித்து வருவன. தனிமனித வளர்ச்சிக்குச் சினம் கொள்ளாதிருத்தல் தேவையான ஒரு பண்பாக அமைந்திருக்கிறது; சினத்தைத் தவிர்ப்பது எல்லாக் காலகட்டத்திற்கும் தேவையான ஒன்று. ஒருவன் பகை நேரும் போதெல்லாம் தன்னை வலிமையுடையவனாக ஆக்கிக்கொள்ள வேண்டியதில்லை; எப்போதும் வலிமையுடையவனாக இருந்தாலே பகையணுகாமல் இருக்கும். அதுபோல ஒருவன் அடிக்கடி தனக்குத் துன்பம் வராமல் காத்துக்கொள்ள வேண்டியதில்லை; துன்பம் வருவதற்குக் காரணமான வெகுளி வராமல் தன்னைக்

காத்துக்கொண்டாலே போதும், அவனுக்கு ஒருபோதும் துன்பம் நேர்வதில்லை என்பதனை குறள் பின்வருமாறு எடுத்துரைக்கிறது:

"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய

பிறத்தல் அதனான் வரும்" (திருக்குறள் 303)

தனிமனிதன் சினமில்லாமல் வாழ்வது இனிது என இனியவை நாற்பது பின்வருமாறு உரைக்கிறது:

"செவ்வியனாய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிது" (இனியவை நாற்பது 36)

இதனையே இன்னா நாற்பதும் பின்வருமாறு குறிக்கிறது:

"சிறியோர் மேற் செற்றால் கொளவின்னா" (இன்னா நாற்பது 37)

வெகுளியால் ஒருவருக்குத் தீங்கே நேரும். எனவே ஒருவர் வெகுளியைத் தவிர்த்தல் வேண்டும் என்பதே நீதி நூல்களின் துணிபு.

வெஃகாதிருத்தல்

வெஃகாமை என்ற சொல் விரும்பாமை என்ற பொருள்தருகிறது. அதாவது, பிறன் ஒருவனுக்குரிய பொருளை அறம் இன்றி விரும்புதலாகும். குறிப்பாக அது பேராசைப்படாதிருத்தலைக் குறிக்கின்றது. பிறர் பொருளுக்கு ஆசைப்படுவது சிறுமை; அதைக் கட்டுப்படுத்தி மனத்தை நல்வழியில் செலுத்துவதே சிறப்பு என்பதனை திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்:

"அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃதுண்டேல்

தவாஅது மேன்மேல் வரும்" (திருக்குறள் 358)

ஆசைப்பட்டுப் பிறன் பொருளை வெஃகுதலானது துன்பங்களுக்கு மட்டும் அன்று, எல்லா உயிர்க்கும் எக்காலத்தும் ஒழியாமல் வருகின்ற பிறவித் துன்பத்தையும் உண்டாக்கும் என்பதனை பின்வரும் குறள் உணர்த்துகிறது:

"அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்

தவாஅப் பிறப்பினும் வித்து" (திருக்குறள் 361)

நடுவுநிலைமை தவறி ஒருவனுக்குரிய பொருளை விரும்புதல் குற்றம்; அதனால் குலமும் கெட்டுப் பலவகைக் குற்றங்களும் உண்டாகும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

நட்புக் கொள்ளுதல்

மனிதர்கள் சமூகத்தோடு நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கு நட்பு துணைசெய்கிறது. நட்பால் விளைவன யாவும் நன்மையே. ஆதலால், நட்பு மனித வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தினைப் பெற்றிருப்பதை நீதி இலக்கியங்கள் எடுத்துரைத்துள்ளன. நண்பர்கள் ஒருவருக்கொருவர் சாகுமளவும் தம் நண்பர் இன்புறும் போது தாமும் இன்புற்று, தம் நண்பர் துன்புறும் போது தாமும் துன்புற்றும்

வாழ்தல் வேண்டும். இதுவே நட்பின் தன்மையாகும். இங்ஙனம் ஒழுகாவிடில் அந்நட்பினால் பயனில்லை என்பதனை நாலடியார் பின்வருமாறு எடுத்துரைக்கிறது:

"நறுமலர்த் தண் கோதாய் நட்டார்க்கு நட்டார்

மறுமையுஞ் செய்வ தொன்றுண்டோ -- இதுமளவும்

இன்புறவ வின்புற் wnoP,a வரோடு

துன்புறவ துன்புறக் கால்" (நாலடியார் 209)

ஒருவர் ஒருவரோடு உறுதியான நட்புடையவர் என்பதற்கு அவர் அவருக்குச் செய்யும் உதவியே உறுதி செய்யும். ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வது சிறந்த நட்பாகும் என்பதை முதுமொழிக்காஞ்சி பின்வருமாறு எடுத்துரைக்கிறது:

"சேரா நன்னட் புதவியினறிப" (முதுமொழிக்காஞ்சி 2-3)

ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதால் நட்பினர்க்கிடையே அன்புணர்வு பெருகுகிறது; தோழமை நாளும் வளர்கிறது. நட்பினரிடையே உறவு வளர்வதற்கு உதவிபுரியும் குணம் துணையாக நிற்கிறது என்பதை நான்மணிக்கடிகை பின்வருமாறு எடுத்துரைக்கிறது:

"நலமாறின் நண்பினார் நண்பு கெடும்" (நான்மணிக்கடிகை 46)

"நகை இனிது நட்டார் ஒருவன்" (நான்மணிக்கடிகை 39)

முடிவுரை

அற இலக்கியங்கள் என்பவை வெறும் சமயக் கோட்பாடுகளையோ அல்லது தத்துவக் கருத்துகளையோ மட்டும் பேசும் நூல்கள் அல்ல; அவை மனித நடத்தையின் நன்மை, தீமைகளை ஆராய்ந்து, சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் உன்னதக் கலை வடிவம் ஆகும். காலங்கள் மாறினாலும், தொழில்நுட்பங்கள் வளர்ந்தாலும், தமிழ் அற இலக்கியங்கள் காட்டும் ஈகை, இன்சொல் கூறல், பெரியாரைப் பேணல் மற்றும் சினமின்மை போன்ற சமுதாயச் சிந்தனைகள் எக்காலத்திற்கும், எவ்விடத்திற்கும் பொருந்தக்கூடிய உலகளாவிய விழுமியங்களாக விளங்குகின்றன. இக்கட்டுரையில் ஆராயப்பட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சான்றோர் நட்பு, பண்பு, பொறுமை, பேராசையின்மை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த ஒரு ஒருங்கிணைந்த சமுதாயப் பார்வையை இன்றும் முன்வைக்கின்றன.

மேற்கோள் நூற்பட்டியல் (Works Cited)

References

[1.] கேசிகன், புலியூர். திருக்குறள் புதிய உரை. பூம்புகார் பதிப்பகம், சென்னை -- 600 018, 2016.

[2.] மாதவன், வே. ரா., பதிப்பாசிரியர். நான்மணிக்கடிகை மூலமும் உரையும். தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை, 1991.

[3.] குமரசேனார், சிங்கார, பதிப்பாசிரியர். முதுமொழிக்காஞ்சி மூலமும் உரையும். புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், புதுச்சேரி -- 11, 1995.

[4.] “இனியவை நாற்பது.” பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள். பல்வேறு பதிப்புகள்.

[5.] “இன்னா நாற்பது.” பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள். பல்வேறு பதிப்புகள்.

[6.] “நாலடியார்.” பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள். பல்வேறு பதிப்புகள்.

[7.] “கலித்தொகை.” சங்க இலக்கியத் தொகுப்பு. பல்வேறு பதிப்புகள்.

[8.] திருவள்ளுவர். திருக்குறள். கேசிகன், புலியூர் பதிப்பித்த திருக்குறள் புதிய உரை-இல் இடம்பெற்றுள்ளது, பூம்புகார் பதிப்பகம், 2016.